பக்கங்கள்: 07
# காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு
சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 ஆவணி 07 வெள்ளிக்கிழமை 26.08.2022 கதிர் 182

## முதலாம் திகதி முதல் நீர்க் கட்டணம் உயர்வு

இலங்கையில் நீர் கட்டணங்கள் செப்டெம்பர் முதலாம் திகதி முதல் அதிகரிக்கப்படும் என்று தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது.

அதன்படி, குடிநீர் கட்டண உயர்வு தொடர்பான விசேட வர்த்தமானி அறிவிப்பு இன்று வெளியிடப்படவுள்ளது 2

# ஐ.நா. கூட்டத் தொடரில் இலங்கைக்கு நெருக்கடி

## சுமந்திரன் எம்.பி. எச்சரிக்கை

பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்படும் என்ற உத்தரவாதத்தை ஐரோப்பிய ஒன்றியத் துக்கு வழங்கியே ஜி.எல்.பி. பிளஸ் வரிச்சலுகையை இலங்கை பெற்றுக்கொண்டது. அந்த உறுதிமொழி மீறப்பட்டுள்ளதால் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் கூட்டத் தொடரில் கடும் நெருக்கடிகளை இலங்கை சந்திக்க நேரிடும். 2



## நல்லூர் கந்தனுக்கு தீர்த்தோற்சவம்



யாழ். நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் தீர்த்தோற்சவம் இன்று நடைபெற்றது.

நாட்டின் பல பாகங்களிலிருந்தும் வருகை தந்த பக்தர்கள் திரண்டு வழிபாடுகளில் ஈடுபட்டனர்.

25 நாள் கொண்ட மகோற்சவத்தில் இன்று மாலை கொடியிறக்கமும், நாளை மாலை பூங்காவனமும் நடைபெறும்.

நாளைமறுதினம் வைரவர் உற்சவத்துடனும் மகோற்சவ நிறைவு பெறும்.

## சர்வதேச நாடுகளின் பிரதிநிதிகளுடன் தமிழர் தீர்வு பற்றி சாணக்கியன் பேச்சு



உலக நாடுகளில் உள்ள தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் இணைந்து இலங்கையிலுள்ள தமிழர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வைப் பெற்றுக் கொடுப்பதற்கு எவ்வாறான அழுத்தங்களைப் பிரயோகிக்க முடியும் என்பது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் விசேட கவனம் செலுத்தியுள்ளார். 2

## ரஞ்சனுக்கு நிபந்தனையுடன் ஜனாதிபதி பொது மன்னிப்பு

நீதிமன்றத்தை அவமதித்தார் என்று குற்றம் சாட்டப்பட்டு தண்டனை அனுபவித்து வரும் முன்னாள் இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்கவுக்கு ஜனாதிபதி பொது மன்னிப்பு வழங்கும் ஆவணத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இன்று கையெழுத்திட்டார்.

இது தொடர்பில் ஜனாதிபதி ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாது:-

வரும் காலத்தில், நீதித்துறையை விமர்சிக்கும் 2



## பொன்னாலை விபத்தில் கர்ப்பிணிப் பெண் சாவு!

மோட்டார் சைக்கிளில் மருத்துவ பரிசோதனைக்காக அழைத்துச் செல்லப்பட்ட கர்ப்பிணிப் பெண் ஒருவர் மோட்டார் சைக்கிளில் இருந்து தவறி விழுந்து பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம், பொன்னாலை பாலத்துக்கு அருகில் இன்று காலை இடம்பெற்ற இந்த விபத்தில் காரைநகர் சிவகாமி அம்மன் கோயிலடியைச் சேர்ந்த ஜெயந்தன் தேவப்பிரியா (வயது 23) என்றே பெண்ணே உயிரிழந்துள்ளார். குறித்த பெண் கர்ப்பமாக உள்ள நிலையில் மருத்துவ பரிசோதனைக்காகக் காரைநகரில் இருந்து மூளாய் 2



## ரஞ்சனுக்குத் தேசியப்பட்டியல் எம்.பி. பதவி

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் உறுதி

சந்தர்ப்பம் கிடைக்கும்போது ரஞ்சன் ராமநாயக்கவை தேசியப்பட்டியல் ஊடாக நாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்க ஐக்கிய மக்கள் சக்தி இணங்கியுள்ளது எனக் அக்கட்சியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

ருவிட்டர் பதிவொன்றில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். நீதிமன்ற அவமதிப்புக் குற்றச்சாட்டின் பேரில் 2



## குடும்பஸ்தர் படுகொலை: மூவர் கைது!

கலஹா, உடதெல்தோட்ட பெல்வூட் கிராமத்தில் வீட்டில் தனிமையில் வசித்து வந்த நபர் ஒருவரைக் கழுத்தறுத்துப் படுகொலை செய்யப்பட்ட நிலையில் கலஹா பொலிஸார் மீட்டுள்ளதுடன் 24 மணித்தியாலங்களுக்குள் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் 2

## நல்லூர் தேர் உற்சவத்தில் 30 பவுண் நகைகள் திருட்டு

### 4 பெண்கள் உட்பட ஐவர் கைது



யாழ்ப்பாணம் - நல்லூர்க் கந்தசுவாமி ஆலய வருடாந்த தேர் உற்சவத்தில் மாத்திரம் 30 பவுண் நகைகள் திருடப்பட்டுள்ளன என்று முறைப்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்தச் சம்பவங்களுடன் தொடர்புடைய சந்தேகத்தில் ஒரு சிறுவன் மற்றும் 4 பெண்கள் உட்பட 5 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இரண்டு ஆண்டுகளின் பின்னர் நல்லூர் கந்தனின் தேர்ப் பவனி நேற்று இடம்பெற்றது. இதனால் அதிகளவான பக்தர்கள் 2

## கடைக்குச் சென்றவரை கத்தியால் வெட்டிப் படுகொலை செய்த பெண்

### சடலத்தைத் தீ வைத்து எரிப்பு

கடைக்குச் சென்ற நபர் ஒருவரைக் கத்தியால் வெட்டிப் படுகொலை செய்ததுடன், உடலைத் தீவைத்து எரித்த சம்பவம் தொடர்பில் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பிபில நாகல பிரதேசத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த பெண் நடத்தும் கடைக்கு வந்த நபரே இவ்வாறு கொல்லப்பட்டுள்ளார்.

அதேபகுதியைச் சேர்ந்த 66 வயதுடைய நபரே உயிரிழந்துள்ளார். 2

## சர்வதேச நாடுகளின் ...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொமன்வெல்த் அமைப்பின் 65 ஆவது நாடாளுமன்றக் கூட்டத்தொடர் கனடாவில் நடைபெற்றது.

500 இற்கும் அதிகமான பல்வேறு நாடுகளையும் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்தக் கூட்டத்தொடரில் பங்கேற்றிருந்தனர்.

இதன்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் பல்வேறு நாடுகளின் தமிழ் அரசியல்வாதிகளைச் சந்தித்துப் பேசினார்.

குறிப்பாக தமிழக சட்ட பேரவையின் சபாநாயகர் எல்.ஏ.அப்பாவுவை சாணக்கியன் சந்தித்துப் பேசினார்.

தமிழ் நாட்டுக்கும் இலங்கைக்கும் இடையிலான அரசியல் விடயங்கள் தொடர்பில் இதன்போது பேசப்பட்டன. இலங்கைக்கு தமிழக அரசு வழங்கி வரும் உதவித் திட்டங்கள் குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

அத்துடன், சிலாங்கூர் மாநில சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் ஜி. குணராஜ்ஜையும் சாணக்கியன் சந்தித்துப் பேசினார்.

மலேசியத் தமிழர்கள், இலங்கை தமிழர்களின் பிரச்சினையில் எவ்வாறு தலையிட முடியும் என்பது குறித்து இதன்போது கலந்துரையாடப்பட்டது.

இந்தச் சந்திப்புகள் குறித்து கருத்து வெளியிட்ட சாணக்கியன் எம்.பி.,

தமிழ் மக்களின் அரசியல் தீர்வு விடயத்தில் உலகம் எங்கும் பரந்து வாழும் தமிழர்களுடைய பங்களிப்பையும், தமிழ் அரசியல்வாதிகளின் பங்களிப்பையும் எவ்வாறு பெற்றுக் கொள்ளவது என்பது குறித்தே அதிக கவனம் செலுத்தப்பட்டது.

குறிப்பாக உலக நாடுகள் முழுவதிலும் தமிழ் அரசியல்வாதிகள் உள்ளனர். அவர்களை ஒருங்கிணைத்து எவ்வாறு இலங்கைத் தமிழர்களுடைய பிரச்சினைகளைத் தீர்ப்பது மற்றும் அரசியல் உரிமைகளைப் பெற்றுக் கொள்வதற்கு எவ்வாறு அழுத்தங்களைப் பிரயோகிப்பது என்பது குறித்து பேசியிருந்தேன்.

அத்துடன், எதிர்காலத்தில் எவ்வாறான திட்டங்களை வகுப்பது என்பது குறித்தும் அதிக கவனம் செலுத்தியிருந்தேன் – என்று குறிப்பிட்டார்.

கொமன்வெல்த் அமைப்பின் 65 ஆவது நாடாளுமன்றக் கூட்டத்தொடரில் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தன, அமைச்சர்களான காமினி லொகுகே, சி.பி. ரத்நாயக்க, நாடாளுமன்ற உறுப்பினர்களான ரோகினி கவிரத்ன, இரா. சாணக்கியன் மற்றும் நாடாளுமன்றத்தின் செயலாளர் நாயகம் உள்ளிட்டவர்கள் பங்கேற்றிருந்தனர்.

## ஐ.நா.கூட்டத் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

சிங்கள ஊடகம் ஒன்றுக்கு இன்று காலை அவர் வழங்கிய செவ்வியின் போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நல்லாட்சியில் பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்க, பிரசல்ஸ் சென்று ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகளுடன் பேச்சு நடத்தியிருந்தார். இதன்போது பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்படும் என்ற உத்தரவாதமும் அது நீக்கப்படும் வரை அந்தச் சட்டம் பயன்படுத்தப்பட மாட்டாது என்ற உறுதிமொழியும் வழங்கப்பட்டிருந்தது. இதையடுத்தே ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை இலங்கைக்குக் கிடைக்கப்பெற்றது.

எனினும், உறுதிமொழி தற்போது மீறப்பட்டுள்ளது. பயங்கரவாதத் தடைச் சட்டம் பயன்படுத்தப்படுகின்றது. இதன் தாக்கம் ஜெனிவா தொடரில் எதிரொலிக்கும். போராட்டக்காரர்கள் வன்முறைகளில் ஈடுபட்டிருந்தால் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு நாட்டில் உள்ள சாதாரண சட்டம் போதுமானது. வன்முறை என்பது தவறுதான். ஆனால், எல்லா வன்முறைகளும் பயங்கரவாத நடவடிக்கையாக அமையாது. குறிப்பாக தேர்தல் காலங்களில் அரசியல்வாதிகளின் அலுவலகங்கள் தாக்கப்படும். அது பயங்கரவாத நடவடிக்கையா?

போராட்டக்களத்தில் இருந்த முன்களப் போராளிகள் தற்போது பயங்கரவாதத் தடைச் சட்டத்தைப் பயன்படுத்தி வேட்டையாடப்படுகின்றனர். இது தவறான அணுகுமுறையாகும். அவசரகாலச் சட்டத்தை மாதாந்தம் நாடாளுமன்றத்தின் அனுமதியுடன்தான் நீடிக்க வேண்டும். சிலவேளை 20 நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனுமதி வழங்காமல் இருக்கலாம் என்பதற்காகவும் வழங்கிய வாக்குறுதியை மறந்து பயங்கரவாதத் தடைச் சட்டத்தை அரசு கையில் எடுத்துள்ளது – என்றார்.

## நல்லூர் தேர் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆலயத்துக்கு வருகை தந்திருந்தனர். சன நெரிசலை சாதகமாக்கிய திருடர்கள் தங்கள் கைங்கரியத்தைக் காட்டினர். 2 தாலிக் கொடி மற்றும் சங்கிலிகள் உள்பட 30 பவுண் நகைகள் களவாடப்பட்டன என்று நல்லூர் உற்சவகால பொலிஸ் காவலரணில் 7 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

நீர்கொழும்பைச் சேர்ந்த பெண் ஒருவர் சங்கிலி அறுக்க முற்பட்டபோது கையும் மெய்யுமாக பிடிபட்டுள்ளார். அவரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் நீர்கொழும்பைச் சேர்ந்த மேலும் 3 பெண்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

மேலும் பொலிஸாரின் விசேட தேடுதல் நடவடிக்கையின்போது கோப்பாயைச் சேர்ந்த 15 வயதுச் சிறுவனும் சந்தேகத்தில் கைதுசெய்யப்பட்டுள்ளான்.

## ரஞ்சனுக்கு......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வகையில் எந்தவொரு கருத்தைத் தெரிவிக்கவோ செயற்படவோ கூடாது என்ற நிபந்தனையுடன் பொது மன்னிப்பு வழங்க ஜனாதிபதி நடவடிக்கை எடுத்துள்ளார்.

ரஞ்சன் ராமநாயக்கவை விடுதலை செய்வதற்குத் தேவையான பணிகளை முன்னெடுக்கும் பொறுப்பு நீதி அமைச்சின் செயலாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

2017 ஆகஸ்ட் 21 ஆம் திகதி அலரிமாளிகைக்கு வெளியே நீதித்துறையை அவமதிக்கும் வகையில் ரஞ்சன் ராமநாயக்க கருத்துத் தெரிவித்தமைக்கு எதிராகத் தொடரப்பட்ட வழக்கில் 2021 ஜனவரி 12 ஆம் திகதியன்று ரஞ்சன் ராமநாயக்கவுக்கு நான்கு ஆண்டுகள் கடுங்காவல் சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பளிக்கப்பட்டது. இந்நிலையில், நீதிமன்றத்தை அவமதித்தமைக்காக மன்னிப்பு கோரி, ரஞ்சன் ராமநாயக்க சத்தியக் கடதாசியொன்றை நேற்று நீதிமன்றத்தில் சமர்ப்பித்திருந்தார்.

தான் தெரிவித்த கருத்துக்கள் முற்றிலும் பிழையானவை என்றும், அந்தக் கருத்துக்களால் பிரதம நீதியரசர் உள்ளிட்ட நீதித்துறையினர் அனைவருக்கும் அகௌரவம் ஏற்பட்டமைக்காக மன்னிப்புக் கோருகின்றார் என்றும் குறித்த சத்தியக் கடதாசி மூலம் தெரிவித்திருந்தார்.

தான் கூறிய கருத்துக்கள் முற்றிலும் பொய்யானவை என்றும், அவற்றை மீளப் பெறுகின்றார் என்றும், எதிர்காலத்தில் இவ்வாறான கருத்துக்களைத் தெரிவிக்கமாட்டேன் என்றும் முன்னாள் இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க நீதிமன்றத்துக்குச் சமர்ப்பித்த சத்தியக்கடதாசியில் மேலும் குறிப்பிட்டுள்ளார் – என்றுள்ளது.

## குடும்பஸ்தர் படுகொலை ...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனச் சந்தேகிக்கப்படும் தந்தை, மகன் உட்பட மூவரைக் கைதுசெய்துள்ளனர்

பொன்னையா ஜெயகுமார் என்ற 45 வயது மூன்று பிள்ளைகளின் தந்தையே கொலை செய்யப்பட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கொலை செய்யப்பட்ட நபரின் மனைவி வெளிநாட்டு வேலைவாய்ப்பு பெற்றுச் சென்றுள்ளார் எனவும், மூன்று மகள்களில் ஒருவர் திருமணம் முடித்து வேறு இடத்தில் வசித்து வருவதோடு ஏனைய இரு மகள்களில் ஒருவர் திருமணமான சகோதரியின் வீட்டில் தங்கி வேலைக்கு சென்று வருவதுடன் மற்றைய மகள் உறவினர் வீடொன்றில் தங்கி பாடசாலை சென்று வரும் நிலையில் குறித்த நபர் மட்டும் தனது வீட்டில் வசித்து வந்துள்ளார் என்று தெரியவருகின்றது.

நேற்றுமுன்தினம் புதன்கிழமை பகல் பொலிஸ் அவசர சேவைப் பிரிவுக்கு நபர் ஒருவர் தொலைபேசியினூடாக வழங்கிய தகவலையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த கலஹா பொலிஸார் அங்கு மேற்கொண்ட முதற்கட்ட விசாரணையின்போது தங்களுக்கு தகவல் வழங்கிய நபரையும், உடம்பில் இரத்தக்கறைகள் காணப்பட்ட அயல் வீட்டு நபரையும் கைதுசெய்து மேற்கொண்ட விசாரணைகளையடுத்து ராகம பிரதேசத்துக்குத் தப்பிச் சென்ற பிரதான சந்தேக நபரும் ராகம பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். பொலிஸார், சந்தேகநபர்களிடம் மேற்கொண்ட விசாரணைகளின் பின்னர் கூறியதாவது:–

குறித்த நபரை கடந்த செவ்வாய்க்கிழமை இரவு 10 மணியளவில் கொலை செய்து விட்டு பின்னர் கொலை செய்யப்பட்ட நபரின் உடைகளை மாற்றி கட்டிலில் படுக்கவைத்துவிட்டு ஏனைய தடயங்களையும் அகற்றியமை விசாரணைகளின்போது தெரியவந்துள்ளது. சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளைமேற்கொண்டுவருகின்றோம் – என்றனர்.

## பொன்னாலை......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைத்தியசாலைக்கு மோட்டார் சைக்கிளில் கணவனால் அழைத்துச் செல்லப்பட்ட நிலையில், பொன்னாலை பாலத்தடியில் மோட்டார் சைக்கிளில் இருந்து அவர் தவறி விழுந்து உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் வட்டுக்கோட்டைப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டதை அடுத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது

## கடைக்குச்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று பிற்பகல் குறித்த நபர் நாகல பிரதேசத்தில் சந்தேகத்துக்கிடமான பெண்ணின் கடைக்கு வந்தபோது வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது.

இதன்போது குறித்த பெண்ணுக்கும் உயிரிழந்த நபருக்கும் இடையில் மோதல் ஏற்பட்டுள்ளது.

பின்னர் சந்தேகநபர் மன்னா கத்தியால் குறித்த நபரை வெட்டியுள்ளார்.

அவர் கடையில் இருந்த பெற்றோல் போத்தலை எடுத்து இறந்தவரின் உடலில் ஊற்றி தீ வைத்து கொளுத்தியும் உள்ளார்.

சடலம் மஹியங்கனை வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

கொலைச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பிபில பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்.

## முதலாம் திகதி......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று அறிவிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே மின்சாரக் கட்டணங்களும் கடந்த வாரத்தில் அதிகரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## ரஞ்சனுக்கு......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரஞ்சன் ராமநாயக்கவுக்கு நான்கு ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

அந்தத் தண்டனையைத் தொடர்ந்து, கடந்த ஆண்டு ரஞ்சன் ராமநாயக்கவின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவி நீக்கப்பட்டது.

எவ்வாறாயினும், அவருக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் இன்று நிபந்தனையுடன் கூடிய ஜனாதிபதி பொதுமன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது.

விளம்பரத் தொடர்புகளுக்கு:-
தொலைபேசி இலக்கம்:-
076 443 8622



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## காணாமல் போன கிணறு!

**நகைச்சுவை நடிகர் வடிவேலுவின் கிணற்றைக் காணவில்லை ‘ஜோக்’ தெரிந்ததுதான். அது போன்ற விடயம் நமது அரசியலிலும் இப்போது நடந்திருக்கின்றது. உண்மையில் பெரும் சுனாமி அல்லது பாரிய மண்சரிவு போன்ற இயற்கை அனர்த்ததின் போதுதான் கிணறு புதையுண்டு காணாமல் போகலாம்.**

**புதிய ஜனாதிபதி ‘ரணில் ராஜபக்ஷ’வின் ஆட்சியிலும் கிழக்குத் தமிழர்களுக்கு எதிராக அப்படியொரு இயற்கைப் பேரனர்த்தம் போன்ற அரசியல் சுனாமி சத்தம் சந்தடியின்றி நடந்து முடிந்திருக்கின்றது.**

**அதில் காணாமல் போய் இருப்பது வடிவேலு குறிப்பிடுவது போல கிணறு அல்ல. 29 கிராம சேவையாளர் பிரிவுகளைக்கொண்ட – பாரிய பிரதேசத்தை உள்ளடக்கிய – கல்முனையின் வடக்கு பிரதேச செயலகமே அரச நிர்வாகக் கட்டமைப்பிலிருந்து காணாமல் போயிருக்கின்றது. கல்முனை (தெற்கு) பிரதேச செயலகம் அதைக் கபளீகரம் செய்ய வழி செய்யப்பட்டிருக்கின்றது போலும். இது தொடர்பில் அப்பகுதி தமிழ் மக்களால் எழுப்பப்படும் கேள்விகள் நியாயமானவை. அவற்றின் விவரம் வருமாறு:–**

***கல்முனை வடக்கு (தமிழ் பிரிவு )பிரதேச செயலக பிரிவானது 1989 ஆம் ஆண்டு உதவி அரசாங்க அதிபர் பிரிவாக ஸ்தாபிக்கப்பட்டு, பின்னர் 1993 ஆம் ஆண்டு அமைச்சரவை அனுமதியுடன் பிரதேச செயலகமாகத் தரமுயர்த்தப்பட்டது.***

***இருந்தபோதிலும், பல்வேறு அரசியல் தலையீடுகள் காரணமாக அதன் அதிகாரங்கள் முழுமையாக வழங்கப்படாமல் மறுக்கப்பட்டிருந்தன. அவற்றைப் பெற்றுக் கொள்வதற்காக உண்ணாவிரதம் உட்பட்ட பல்வேறு போராட்டங்கள் கடந்த 30 வருடங்களாக நடைபெற்று வருகின்றன.***

***30 வருடங்களுக்கு மேலாக இயங்கி வருகின்ற கல்முனை வடக்கு பிரதேச செயலக பிரிவு, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் உத்தியோகபூர்வமான இணையதளத்தில் இருந்து தற்போது நீக்கப்பட்டுள்ளது. அங்கிருந்த 29 கிராமசேவை உத்தியோகத்தர் பிரிவுகளும் கல்முனை தெற்கு பிரதேச செயலகத்துடன் சேர்க்கப்பட்டுள்ளன.***

***இந்த அநியாயத்தை, அநீதியைத் தட்டி கேட்க யாரும் இல்லையா? அரசியல்வாதிகளே, புத்திஜீவிகளே, புலம்பெயர் தமிழர்களே என்ன செய்கிறீர்கள்?***

***அமைச்சரவை தீர்மானத்திற்கு எதிராக தற்போது யார் இந்தத் தீர்மானத்தை எடுத்தவர்? இந்தத் தீர்மானம் சட்ட வலிமையுடையதா? எதற்காக இந்தத் தீர்மானம்? எதன் அடிப்படையில் எடுக்கப்பட்டது? கல்முனை தெற்குப் பிரிவில் 58 கிராம சேவை பிரிவுகளையும் சேர்த்து வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளதா? கடந்த 30 வருடங்களாக தமிழர்கள் வாழ்ந்த பிரதேசங்களில் காணப்படும் அரச காணிகளை முஸ்லிம்களுக்கு மாத்திரம் பகிர்ந்து அளித்தது போதாதா? தற்போது எஞ்சி இருக்கும் குளங்களையும், நீர்நிலைகளையும், காணிகளையும் சட்ட விரோதமாக அவரகளுக்கு தொடர்ச்சியாக வழங்கவே இந்தத் தீர்மானமா?***

***கல்முனை வடக்கு பிரதேச செயலகத்திற்கு நியமிக்கப்பட்டு தற்போது கடமையாற்றி வருகின்ற சுமார் 300 பணியாளர்களை என்ன செய்வது? ஏற்கனவே உருவாக்கப்பட்ட வடக்கு பிரதேச ஆளணி அங்கீகாரத்துக்கு என்ன நடந்தது ? கல்முனை தெற்கு பிரதேசத்திற்கு இலங்கையில் எங்கும் இல்லாதவாறு இரட்டை ஆளணி அங்கீகாரமா?***

**– விடை தெரியாத வினாக்கள் இவை. ரணில் ராஜபக்ஷதான் பதில் தர வேண்டும்.**

# பயணக் கட்டுப்பாடுகளை தளர்த்தியது சுவிஸ் அரசு!

இலங்கை மீது விதித்திருந்த கடுமையான பயணக் கட்டுப்பாடுகளை தளர்த்துவதற்கு சுவிற்ஸர்லாந்து அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

சுவிஸ் அரசாங்கத்தின் இந்தத் தீர்மானத்தை இலங்கை உள்நாட்டு சுற்றுலா செயற்பாட்டாளர் சங்கம் வரவேற்றுள்ளது.

சுவிற்ஸர்லாந்து இலங்கைக்கு ஒரு முக்கியமான சந்தையாகும் என இலங்கை உள்நாட்டு சுற்றுலா சங்கத்தின் தலைவர் நிராத் விஜேதுங்க தெரிவித்துள்ளார்.

குறிப்பாக குளிர்காலத்தில் சுவிற்ஸர்லாந்து சுற்றுலாப் பயணிகளுக்கு இலங்கை சிறந்த சுற்றுலாத் தளமாக உள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், பயணக்கட்டுப்பாடு தளர்த்தப்பட்டுள்ளதால், சுவிஸ் பயணிகளின் எண்ணிக்கை அதிரித்து, இலங்கையின் சுற்றுலாத்துறை மேம்படும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சுவிற்ஸர்லாந்து அரசாங்கம், இலங்கையின் அண்மைக்கால முன்னேற்றங்களைக் கருத்திற் கொண்டு, இலங்கையின் அரசியல் மற்றும் சமூக நிலைமைகள் தொடர்பாக விழிப்புடன் இருக்குமாறு தனது குடிமக்களுக்கு பயண ஆலோசனை வழங்கியிருந்தது. அத்துடன், இலங்கை விவகாரத்தில் சமூக வலைத்தளங்கள் உட்பட அரசியல் கலந்துரையாடல்களைத் தவிர்க்குமாறும், உள்ளூராட்சி மன்றங்களின் அறிவுறுத்தல்களைப் பின்பற்றுமாறும் தமது குடிமக்களுக்கு சுவிற்ஸர்லாந்து அரசாங்கம் அறிவுறுத்தியிருந்தது. இலங்கைக்கான பயணத்துக்கு முன் னரும், பயணத்தின் இடைநடுவிலும் சமகால சூழ்நிலை, ஊரடங்குச் சட்டங்கள் தொடர்பாக ஊடகங்கள், சுற்றுலா வழிகாட்டிகள் மூலம் ஆராயுமாறும் கோரப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# அத்தியாவசிய சேவைகளுக்காக அதிக எரிபொருள் ஒதுக்கீடு!

அத்தியாவசிய சேவைகளுக்காக அதிக எரிபொருள் ஒதுக்கீட்டை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தேசிய எரிபொருள் அனுமதி முறைமை தொடர்பான முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் இடம்பெற்றுள்ளதுடன், கடந்த 3 வாரங்களின் தரவுகளை ஒப்பிடும் போது வாகனப் பதிவுகள் மற்றும் எரிபொருளை பெற்றுக் கொண்டோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளமை தெரியவந்துள்ளது.

எனினும், எரிபொருள் பயன்பாடு குறைவாகக் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது. இதனிடையே, வாகனம் அல்லாத எரிபொருள் தேவைக்காக சுற்றுலா எரிபொருள் அனுமதி செப்ரெம்பர் முதல் வாரத்தில் அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

# 40 லட்சம் டொலர் பெறுமதியான அத்தியாவசிய மருத்துவ பொருள்களை வழங்க உலக சுகாதார அமைப்பு உறுதி

இலங்கை மக்களின் அவசர சுகாதாரத் தேவைகளைப் பூர்த்தி செய்ய 40 லட்சம் அமெரிக்க டொலர் பெறுமதியான அத்தியாவசிய மருத்துவப் பொருள்கள் வழங்கப்படும் என உலக சுகாதார அமைப்பின் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் டெட்ரோஸ் அதானம் கெப்ரேயஸஸ் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகப் பதவியேற்றதற்கு அனுப்பி வைத்துள்ள வாழ்த்துச் செய்தியில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு வழங்கப்படும் அத்தியாவசிய மருத்துவப் பொருள்களைக் கொள்வனவு செய்யும் பணிகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனவும், விநியோகிப்பதற்கான திகதிகள் மற்றும் பெயர்கள் பற்றிய விவரம் உலக சுகாதார அமைப்பின் இலங்கை அலுவலகத்தால் அறிவிக்கப்படும் எனவும் இந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கொரோனா தொற்றுநோய் பரவலால் இலங்கை எதிர்கொண்டுள்ள பொருளாதார அழுத்தத்தை உலக சுகாதார அமைப்பு ஏற்றுக்கொள்வதாகவும், சர்வதேச சந்தையில் உணவு மற்றும் எண்ணெய் விலை உயர்வு, பாதிக்கப்படக்கூடிய சமூகத்துக்கு பெரும் சவாலாக இருப்பதாகவும், அந்த சவாலான காலகட்டத்தில் இலங்கைக்கு உதவிகளை வழங்க உலக சுகாதார அமைப்பு தயாராக உள்ளதாகவும் கெப்ரேயஸஸ் தெரிவித்துள்ளார்.

இலங்கை மக்களின் அத்தியாவசிய சுகாதாரத் தேவைகளைப் பூர்த்திசெய்து கொள்ளத் தேவையான அவசர உதவிகளை வழங்குமாறு ’உலக சுகாதார அமைப்பின் அவசரகால சுகாதார வேலைத்திட்டத்துக்கு’ பணிப்புரை விடுத்துள்ளதாகத் தெரிவித்த பணிப்பாளர் நாயகம், உலக சுகாதார அமைப்பின் இலங்கை அலுவலகம் மற்றும் ஏனைய அமைச்சுகளுடன் இணைந்து அத்தியாவசிய மருத்துவப் பொருள்களை விநியோகிக்க நடவடிக்கை எடுப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை சுகாதாரக் கட்டமைப்பின் செயல்திறன் மற்றும் தாங்கிக்கொள்ளும் திறன் உள்ளிட்ட மக்களுக்கு ஏற்படும் சுகாதார பிரச்சினைகளை உலக சுகாதார அமைப்பு உன்னிப்பாகக் கண்காணிப்பதாகவும், இலங்கையில் மாகாண சுகாதார சேவைகளை வலுப்படுத்தத் தேவையான தொழில்நுட்ப உதவிகளை உலக சுகாதார அமைப்பு வழங்குவதாகவும் வைத்தியர் டெட்ரோஸ் அதானம் கெப்ரேயஸஸ் மேலும் தெரிவித்துள்ளார்.

# பொதுஜன பெரமுன கட்சியின் ஆதரவாளர்களை பேரவாவியில் தள்ளிய பெண்ணுக்கு விளக்கமறியல்!



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஆதரவாளர்கள் குழுவொன்றை கடந்த மே 9 ஆம் திகதி பேர வாவியில் தள்ளிய சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட பெண் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இந்த வழக்கு நேற்று (வியாழக்கிழமை) கொழும்பு கோட்டை நீதிவான் திலின கமகே முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

சந்தேகநபரைஅடையாளஅணிவகுப்பில் ஆஜர்படுத்த உத்தரவிடுமாறு பொலிஸார் நீதிமன்றில் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இதற்கமைய சந்தேகநபரை எதிர்வரும் முதலாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

அத்துடன், அன்றைய தினம் அவரை அடையாள அணிவகுப்பில் முன்னிலைப்படுத்துமாறு உத்தரவிட்டார்.

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு
வெள்ளிக்கிழமை
26.08.2022

# ஐ.நா. பாதுகாப்புக் கவுன்சிலில் உக்ரைனை ஆதரித்த இந்தியா



ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் உக்ரைன் அதிபர் காணொலி வாயிலாகப் பங்கேற்கின்றமையை எதிர்த்து ரஷ்யா வாக்களித்தது. ஆனால் பதினைந்து உறுப்பினர்கள் கொண்ட கவுன்சிலில் இந்தியா உட்பட 13 நாடுகள் ஆதரவாக வாக்களித்தன.

ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் ஆலோசனை கூட்டம் நேற்றுத் தொடங்கியதும் உக்ரைன் அதிபர் வோலோடிமிர் ஜெலென்ஸ்கியை ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் காணொலி வாயிலாக உரையாற்ற அனுமதிக்கும் ஒரு முன்மொழிவு கொண்டு வரப்பட்டது. ஐ.நா.சபைக்கான ரஷிய தூதர் வசிலி ஏ நெபென்சியா இந்தப் பிரச்சினையில் நடைமுறை வாக்கெடுப்பைக் கோரினார். அதில் ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் உக்ரைன் அதிபர் காணொலி வாயிலாகப் பங்கேற்பதை எதிர்த்து ரஷ்யா வாக்களித்தது. சீனா வாக்களிக்காமல் புறக்கணித்தது. இந்தியா உட்பட 13 நாடுகள் ஆதரவாக வாக்களித்தன.

அதே வேளையில், ஐ.நா. கூட்டத்தில் உக்ரைன் அதிபர் நேரடியாகக் கலந்து கொள்வதை ரஷ்யத் தரப்பில் எதிர்க்கவில்லை என்று கூறப்பட்டது.

இதனை தொடர்ந்து, ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் காணொலி வாயிலாக உக்ரைன் அதிபர் பங்கேற்பார் என ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் தலைவர் ஜாங் ஜுன் அறிவித்தார்.



# ரஷ்ய இராணுவத்துக்கு மேலும் 1 லட்சத்து 37 ஆயிரம் வீரர்கள்

உக்ரைனுக்கு எதிரான போருக்கு இடையே ரஷ்யப் படையில் வீரர்களின் எண்ணிக்கையை ஒரு லட்சத்து 37 ஆயிரத்தால் அதிகரிக்க ரஷ்ய அதிபர் புடின் உத்தரவிட்டு உள்ளார்.

உக்ரைனுக்கு எதிரான ரஷ்யப் போர் ஆறு மாதங்களைக் கடந்து தொடர்கிறது. போர் நீண்டு கொண்டே செல்கிறது.

இதற்கிடையில் படையில் வீரர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க அதிபர் புடின் உத்தரவிட்டு உள்ளார். இதனால், இராணுவ வீரர்களின் மொத்த எண்ணிக்கை பதினொரு லட்சத்து ஐம்பதாயிரம் என்ற அளவில் உயரும்.

அதிபர் புடினின் உத்தரவு வரும் ஜனவரி முதலாம் தியில் இருந்து நடைமுறைக்கு வரும்.

இந்த இராணுவ வீரர்கள் எண்ணிக்கை அதிகரிப்பினால் மொத்த ரஷ்யப் படையின் எண்ணிக்கை 20.39 லட்சம் ஆக உயரும். அவர்களில் 11.50 லட்சம் பேர் இரணுவ வீரர்களாக இருப்பார்கள். இதுபற்றி அரசு வெளியிட்ட செய்தியில், சுயவிருப்பம் கொண்ட –ஒப்பந்த அடிப்படையிலான –வீரர்களே இதில் இடம் பெறுவார்கள் என்றும் இதனை உக்ரைனில் சிறப்பு ராணுவ நடவடிக்கை என்றும் தெரிவித்து உள்ளது.

இதுதவிர, சில கைதிகளைஜ் கூட இராணுவப் பணியின் ஒரு பகுதியாகப் படையில் சேர வரும்படி அழைப்பு விடப்பட்டு உள்ளது என ரஷ்ய ஊடகங்கள் தெரிவித்து உள்ளன.



# இந்திய பெண்கள் மீது இனவெறித் தாக்குதல்

## அமெரிக்காவில் சம்பவம்

அமெரிக்காவில் இந்தியர்கள் மீதான இனவெறித் தாக்குதல் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்காவின் டெக்சாஸ் பகுதியில் அமெரிக்காவில் வசிக்கும் இந்திய பெண்களை கொடூரமாக தாக்கிய அமெரிக்க பெண்ணை பொலிஸார் கைது செய்தனர்.

டெக்சாஸ் மாகாணத்தில் உள்ள டல்லாஸ் நகரில், இந்திய வம்சாவளியை சேர்ந்த 4 பெண்கள் ஹோட்டலில் இரவு சாப்பிட்டுவிட்டு அங்குள்ள வாகன நிறுத்துமிடத்தில் தங்கள் காரை எடுக்க வந்தனர் எனக் கூறப்படுகிறது. அப்போது அங்கு வந்த அமெரிக்க பெண் ஒருவர், இவர்களை வழிமறித்து ஆவேசமாகத் தகாத வார்த்தைகளால் திட்டிப் பேசியுள்ளார். அந்த அமெரிக்க பெண்மணி, இந்திய பெண்களை நோக்கி, நான் இந்தியர்களை வெறுக்கிறேன். இந்த இந்தியர்கள் அனைவரும் ஒரு சிறந்த வாழ்க்கையை விரும்பி அமெரிக்காவிற்கு வருகிறார்கள்.

நான் எங்கு சென்றாலும், நீங்கள் இந்தியர்கள் எல்லா இடங்களிலும் இருக்கிறீர்கள். இந்தியாவில் வாழ்க்கை மிகவும் சிறப்பாக இருந்தால், நீங்கள் ஏன் இங்கே இருக்கிறீர்கள்? இந்தியாவுக்குத் திரும்பிச் செல்லுங்கள் என்று பேசினார்.

அதன்பின் அவர்களை சரமாரியாக தாக்கத் தொடங்கினார். இந்த சம்பவம் கடந்த புதன்கிழமை இரவு நடந்துள்ளது. இந்த நிலையில், இந்த சம்பவத்தை வீடியோவாக எடுத்து ஒருவர் சமூக வலைதளங்களில் பகிர்ந்துள்ளார்.

அதில் அவர் குறிப்பிட்டுள்ளதாவது:–

இந்த சம்பவம் டெக்சாஸில் டல்லாஸ் பகுதியில் என் அம்மாவும் அவரது மூன்று நண்பர்களும் இரவு உணவிற்குச் சென்ற பிறகு நடந்தது என்று பதிவிட்டுள்ளார். இந்திய பெண்களை அமெரிக்க பெண்மணி தாக்கும் அதிர்ச்சிகரமான வீடியோ, அமெரிக்கா முழுவதும் உள்ள இந்திய–அமெரிக்க சமூகத்தினரிடையே வைரலாக பரவியது.

# இடைக்கால முன் பிணை அனுமதி இம்ரான்கானுக்கு

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான்கான் (வயது 69) எதிராக பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குத் தொடர்பில் அவருக்கு இடைக்கால முன் பிணை வழங்கப்பட்டுள்ளது

தற்போதைய ஷாபாஸ் ஷெரீப் அரசுக்கு எதிராக தொடர்ந்து அவர் பொதுக்கூட்டங்களை நடத்தி வருகிறார்.

கடந்த சனிக்கிழமையன்று இஸ்லாமாபாத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் ஆவேசமாக பேசிய இம்ரான்கான், அந்த நாட்டின் நீதித்துறைக்கும், பொலிஸுக்கும் மிரட்டல் விடுக்கிற வகையில் பேசினார். இதனால் அவர் மீது மறுநாளில் பயங்கரவாத தடுப்பு சட்டத்துன் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டது.

இது பழிவாங்கும் நடவடிக்கை என்று அவர் விமர்சித்தார். இந்த வழக்கில் அவர் அமர்வு நீதிமன்றத்தில் பிணை பெற ஏதுவாக 3 நாள் பிணை அனுமதியை இஸ்லாமாபாத் உயர் நீதிமன்றம் வழங்கியது.

இந்த வழக்கில் இம்ரான் கான் பிணை கேட்டு இஸ்லாமாபாத் பயங்கரவாத தடுப்பு நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்தார்.

இந்த மனுவை நீதிபதி ராஜா ஜாவத் அப்பாஸ் ஹசன் நேற்று விசாரித்தார்.

இதையொட்டி நீதிமன்ற வளாகத்தில் பலத்த பாதுகாப்பு போடப்பட்டிருந்தது.

விசாரணை முடிவில் அவருக்கு செப்டம்பர் முதலாம் திகதி வரை இடைக் கால முன் பிணை வழங்கி நீதிபதி ராஜா ஜாவத் அப்பாஸ் ஹசன் உத்தரவிட்டார்.

# கொரோனா, எயிட்ஸ், குரங்கு அம்மை இத்தாலியில் மூன்றுமே ஒரே நபருக்கு!

இத்தாலியைச் சேர்ந்த 36 வயது நபர் ஒருவருக்கு கொரோனா, எச்.ஐ.வி.(எய்ட்ஸ்), குரங்கு அம்மை என மூன்று நோய்ப் பாதிப்புகளும் கண்டறியப்பட்டிருப்பது மருத்துவர்களை அதிர்ச்சி அடைய வைத்துள்ளது.

ஐந்து நாள் பயணமாக ஸ்பெயின் சென்று வந்த 36 வயது நபருக்கு 9 நாள்கள் கழித்து தொண்டை வலி, சோர்வு, தலைவலி உள்ளிட்ட அறிகுறிகள் தென்பட்டுள்ளன. ஏற்கனவே கொரோனா தடுப்பூசியின் இரு டோஸ்களையும் அவர் போட்டுக்கொண்டுள்ளார். அவருக்கு ஒருமுறை கொரோனா பாதிப்பும் ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில், சிறிய, வலி நிறைந்த கொப்புளங்கள் அவரது உடலில் தென்பட்டுள்ளன. இதையடுத்து மருத்துவமனைக்கு சென்ற அந்த நபருக்கு பரிசோதனைகள் செய்யப்பட்டன. அவரைப் பரிசோதித்த மருத்துவர்கள் அவருக்கு கல்லீரல் மற்றும் மண் ணீரலில் வீக்கம் இருப்பதையும் கண்டனர். பரிசோதனை முடிவுகளில் ஒமைக்ரான் வகை கொரோனா பாதிப்பு உறுதி செய்யப்பட்டது. அதேபோல், குரங்கு அம்மை, எச்.ஐ.வி. பாதிப்பும் உறுதி செய்யப்பட்டமை அதிர்ச்சி அளித்தது.

இது குறித்து மருத்துவ நிபுணர்கள் கூறுகையில், கொரோனா தொற்றும் குரங்கு அம்மை அறிகுறிகளும் ஒத்திருப்பதை எடுத்துக்காட்டும் வகையில் இது உள்ளது. அதேபோல் ஒருவருக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பை கண்டறிய மற்றும் நோய் சிகிச்சைக்கு ஆண்டிஜென் பரிசோதனையோடு ஒருவரது பாலியல் பழக்க வழக்கங்களையும் அறிந்து கொள்வது மிகவும் அவசியமானது என்றார்.



# இந்திய உச்ச நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி ரமணா ஓய்வு




## அவரின் இறுதி அமர்வு நேரடி ஒளிபரப்பு

புதுடெல்லி,ஓக.26

இந்திய உச்ச நீதிமன்றத்தின் 48 ஆவது தலைமை நீதிபதியான என்.வி.ரமணா இன்றுடன் ஓய்வு பெறுகிறார்.

தலைமை நீதிபதியாக என்.வி.ரமணா கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் 24ம் தேதி பொறுப்பேற்றார். இவரது பணிக்காலம் இன்றுடன் நிறைவடைகிறது. இதனை தொடர்ந்து, புதிய தலைமை நீதிபதியை, ஓய்வு பெறும் தலைமை நீதிபதி ரமணா மத்திய அரசுக்கு பரிந்துரைத்தார். இதையடுத்து, புதிய தலைமை நீதிபதியாக யு.யு.லலித் நாளை பொறுப்பேற்கிறார். அவருக்கு ஜனாதிபதி திரௌபதி முர்மு பதவிப் பிரமாணம் செய்து வைக்கிறார். இந்நிலையில், தலைமை நீதிபதி என். வி.ரமணா இன்றுடன் ஓய்வு பெற உள்ள நிலையில் அவர் இன்று விசாரிக்கும் வழக்குகள் இணையதளத்தில் நேரலையில் ஒளிபரப்பப்பட ஏற்பாடாகி இருந்தது.

இந்திய உச்ச நீதிமன்ற வரலாற்றில் வழக்கு விசாரணை நேரலையில் ஒளிபரப்பப்படுவது இதுவே முதல் முறையாகும். தலைமை நீதிபதி என்.வி.ரமணா தலைமையிலான இன்றைய அமர்வில் அடுத்து தலைமை நீதிபதியாக பொறுப்பேற்க உள்ள யு.யு.லலித் உள்ளிட்ட நீதிபதிகள் இடம்பெற்றுள்ளனர். இன்று அரசியல் கட்சிகள் இலவசங்களை அறிவிப்பதற்கு தடை விதிக்கும் வழக்கு, பெகாசஸ் உள்பட முக்கிய வழக்குகளில் தீர்ப்பு வழங்கப்பட உள்ளது.

# அடிபம்பில் இருந்து நீரும், நெருப்பும் ஒரே நேரத்தில் வெளியேறும் அதிசயம்

## மத்திய பிரதேச கிராம மக்கள் பீதி




போபால், ஓக.26

மத்திய பிரதேசத்தின் சத்தார்பூர் மாவட்டத்தில் உள்ள கச்சார் கிராமத்தில் அடிபம்பு ஒன்றில் இருந்து ஒரே நேரத்தில் தண்ணீரும், நெருப்பும் கொப்பளித்து வெளியேறியது. இது தொடர்பான காட்சிகள் சமூக வலைதளங்களில் வேகமாக பரவி வருகிறது.

கச்சார் கிராமத்தில் குடிதண்ணீர் தேவையை பூர்த்தி செய்வதற்கா. குழாய்க் கிணற்றுடன் இணைக்கப்பட்ட இரண்டு அடிபம்புகள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் ஓர் அடிபம்பில் இருந்து

இவ்வாறு நீரும், நெருப்பும் ஒரே நேரத்தில் வெளியேறுவதால், கிராம மக்கள் பீதியடைந்துள்ளனர்.

இது குறித்து ஆய்வாளர்கள் கூறுகையில், அடிபம்பில் இருந்து நீருடன், நெருப்பு வெளியேறுவது அதிசய நிகழ்வு அல்ல என்றும், இது பொதுவாக ஹைட்ரோகார்பன் எனப்படும் மீத்தேன் வாயு நிலத்தடியிலிருந்து குழாய்க் கிணறு வழியாக வெளியேறுவதால் ஏற்படும் நிகழ்வு என்றும் கூறுகின்றனர்.



# அடுக்குமாடிக் கட்டடத்தில் தீ! மொராதாபாத்தில் ஐவர் பலி!!

மொராதாபாத்,ஓக.26

உத்தரப்பிரதேச மாநிலம் மொராதாபாத் மாவட்டத்தில் உள்ள அடுக்குமாடி கட்டடம் ஒன்றில் திடீரென தீ விபத்து ஏற்பட்டது. இந்தத் தீ விபத்து குறித்து குறித்து உடனடியாக தீயணைப்புத் துறையினருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. அவர்கள் விரைவாக வந்து தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டனர். அதற்குள் தீ மளமளவென பற்றி எரிந்ததால், தீயில் சிக்கி 5 பேர் உயிரிழந்தனர். மேலும் 7 பேர் படுகாயமடைந்தனர். காயமடைந்தவர்கள் கட்டடத்தில் இருந்து மீட்கப்பட்டு சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

கிடைத்த தகவலின்படி, கட்டடத்தில் வசித்தவர்கள் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். தீ விபத்துக்கான காரணம் குறித்து அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# காங்கிரஸை குலாம் நபி ஆசாத் முழுமையாகத் தலை முழுகினார்

புதுடில்லி, ஓக.26

காங்கிரஸ் தலைமை மீது அதிருப்தியில் இருந்து வந்த அக்கட்சி மூத்த தலைவர் குலாம் நபி ஆசாத், கட்சியில் இருந்து முழுமையாக விலகுகிறார் என அறிவித்துள்ளார்.


ராகுல் குறித்து குறை தெரிவித்து ஐந்து பக்கக் கடிதத்தை சோனியாவிற்கு அவர் அனுப்பி வைத்துள்ளார். இதனால் சோனியா கவலை அடைந்துள்ளார்.

லோக்சபாவுக்கு 2014 இல் நடந்த தேர்தலில் இருந்து காங்கிரஸ் கட்சி தொடர்ந்து தோல்விகளைச் சந்தித்து வருகிறது.

கட்சியில் அனைத்து நிலைகளிலும் சீர்திருத்த நடவடிக்கைகள் மேற் கொள்ள வலியுறுத்தி, குலாம் நபி ஆசாத், ஆனந்த் சர்மா உள்ளிட்ட 23 மூத்த தலைவர்கள் கட்சி தலைவர் சோனியாவுக்கு கடிதம் எழுதினர்.

இதையடுத்து, 'ஜி – 23' என்றழைக்கப்படும் இந்த அதிருப்தி தலைவர்கள் ஓரங்கட்டப்பட்டனர். கட்சிக்கு நிரந்தர தலைமையை இவர்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றனர்.

ஜம்மு – காஷ்மீரில் காங்கிரஸ் தேர்தல்



பிரசாரக் குழுத் தலைவராக, அதிருப்தியாளர் குழுவைச் சேர்ந்த குலாம் நபி ஆசாத் சமீபத்தில் நியமிக்கப்பட்டார். ஆனால், சில மணி நேரங்களிலேயே அந்தப் பொறுப்பை ஏற்கத் தயாராக இல்லை என்று குலாம் நபி ஆசாத் அறிவித்தார்.

இந்நிலையில், காங்கிரஸ் கட்சியில் இருந்து விலகுவதாக குலாம் நபி ஆசாத் அறிவித்துள்ளார். ராஜினாமா கடிதத்தை, சோனியாவுக்கு அனுப்பி வைத்துள்ளார்.

# மரணித்த கோவில் காளைக்கு கிராமத்தில் கண்ணீர் அஞ்சலி

திண்டுக்கல் அருகே இறந்த கோவில் காளைக்கு கிராம மக்கள் கண்ணீர் அஞ்சலி செலுத்தினர்.

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அருகே உள்ள சாத்தம்பாடி கிராமத்தில் வீரமுடையார் சுவாமி கோவில் உள்ளது. இந்த கோவிலுக்கு சொந்தமான காளை ஒன்று ஊர் மக்கள் சார்பில் வளர்க்கப்பட்டு வந்தது. இந்த காளை திண்டுக்கல், மதுரை, திருச்சி உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் நடந்த ஜல்லிக்கட்டு போட்டிகளில் பங்கேற்று வெற்றி பெற்றமையுடன் ஊருக்கும் பெருமை சேர்த்து வந்தது.

இதனால் அந்த காளையை சாத்தம்பாடி கிராம மக்கள் தங்கள் வீட்டு பிள்ளையாக வளர்த்துப் பராமரித்து வந்தனர். திருவிழா காலங்களில் இந்த காளைக்கு முதல் மரியாதை அளிக்கப்படுவது வழக்கம்.

இந்நிலையில் கடந்த சில நாள்களாக வயது முதிர்வு காரணமாக கோவில் காளை நோய்வாய்பட்டு இருந்தது. நேற்றுப் பரிதாபமாக உயிரிழந்தது. இதனையடுத்து அந்த ஊர் மக்கள் காளைக்கு தங்கள் கண்ணீர் அஞ்சலியை காணிக்கையாக்கினர். ஊர் மந்தையில் காளை வைக்கப்பட்டு அதற்கு மாலைகள், வேட்டி துண்டுகள் அணிவித்தும், சந்தனம், ஜவ்வாது பூசியும் வழிபட்டனர். அதனைத் தொடர்ந்து மேளதாளங்கள் முழங்க காளை ஊர்வலமாக எடுத்து வரப்பட்டு வாண வேடிக்கையுடன் கோவில் அருகிலேயே அடக்கம் செய்யப்பட்டது. அதன் பிறகு ஊர் மக்கள் தங்கள் குடும்பத்தில் ஒருவர் இறந்தால் என்னென்ன சடங்குகள் செய்வார்களோ அவற்றைச் செய்தனர்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# தமிழருக்கான கல்முனை வடக்கு பிரதேச செயலகம் அரச நிர்வாகக் கட்டமைப்பிலிருந்து திடீரென மாயம்

## அரசியல்வாதிகள் காட்டம்; இனவாதப் பாரபட்சம் என மக்கள் கொதிப்பு





(காரைதீவு நிருபர் வி.ரி.சகாதேவராஜா)

அரச வலைத்தளத்தில் இருந்து கல்முனை வடக்கு செயலகமும் 29 கிராம சேவையாளர் பிரிவுகளும் நீக்கப்பட்டு இருக்கின்றன.

இது தமிழ் மக்கள் மத்தியில் பாரிய உணர்வலைகளை தோற்றுவித்திருக்கின்றன.

இது தொடர்பாக உணர்வுள்ள சில அரசியல்வாதிகள் வழமைபோல காட்டமான அறிக்கைகளை வெளியிட்ட வண்ண மிருக்கின்றனர்.

மக்களும் வழமைபோல ஆக்ரோஷமாக கருத்துக்களை வெளியிட்டு கொதிப்பில் உள்ளனர்.

இந்நிலையில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன், காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கிருஷ்ணபிள்ளைஜெயசிறில், இலங்கை தமிழரசுக் கட்சியின் வாலிபர் முன்னணி துணை செயலாளர் அ.நிதான்சன் ஆகியோர் வாய்திறந்துள்ளனர்.

### கலையரசன் எம்பி.

அரசவலைத்தளத்தில் இருந்து எமது பாரம்பரிய கல்முனை வடக்கு பிரதேச செயலகம் நீக்கப்பட்டு இருப்பது தொடர்பாக எமது தமிழ் மக்கள் கொதிப்படைந்துள்ளனர். இது தொடர்பாக சம்பந்தப்பட்டவர்களிடம் பேசி நடவடிக்கை எடுக்கப்படும் என்று அம்பாறை மாவட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் காட்டமாக தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இந்த விடயம் மேலும் மேலும் கல்முனை தமிழ் மக்களுக்கு மாத்திரம் அல்ல, ஒட்டுமொத்த தமிழ் மக்களின் மனங்களையும் புண்பட செய்திருக்கின்றது. மாறாக கொதிப்படையை செய்திருக்கின்றது.ஒற்றுமைபற்றிப்பேசிக்கொண்டு இன்னும் இன்னும் இந்த வேற்றுமை நடவடிக்கைகளை தொடர்ச்சியாக செய்து வருகின்ற அந்த கயவர்களின் செயல்பாடு நிறுத்தப்பட வேண்டும். இல்லாவிட்டால்நாங்களும்அதேபாணியிலேயே செயல்பட நிர்ப்பந்திக்கப்படுவோம்.

நாங்கள் எவ்வளவுதான் ஒற்றுமையாக வாழ வேண்டும் ஐக்கியமாக, சமாதானமாக வாழ வேண்டும் என்று பல முயற்சிகள் எடுத்த போதிலும் தொடர்ச்சியாக சில இனவாதிகள் அதனை அலட்சியம் செய்து வருகின்றமை ஆரோக்கியமான எதிர்காலத்துக்கு வழி வகுக்காது என நினைக்கின்றேன். எனவே இந்த விடயத் தில் உரிய, சம்பந்தப்பட்ட வர்களோடு பேசி கடுமையான நடவடிக்கை எடுக்க இருக்கின்றேன். என்னிடம் கல்முனையை சேர்ந்த முக்கிய பிரதிநிதிகள் இது தொடர்பாக தொடர்ச்சியாக ஆத்திரத்தோடு முறையிட்டு வருகின்றார்கள். பலர் நேரடியாக வந்து தமது கண்டனங்களை உணர்ச்சி வசப்பட்டு தெரிவிக்கின்றார்கள்.

இதனை இன்னும் இன்னும் நீங்களும் உங்கள் கட்சியும் வெறுமனே பார்த்துக் கொண்டு இருப்பது ஏன் என ஆக்ரோஷமாக கேட்கிறார்கள்.

எனவே இதனை சாதாரணமாக நான் எடுத்துக் கொள்ள முடியாது. எனது கட்சியின் தலைவர் மற்றும் ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் உள்ளிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களிடமும் இது தொடர்பாகத் தெரிவித்து இருக்கின்றேன்.

விரைவில் இதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். –.என்றார்.

### தவிசாளர் ஜெயசிறில்

கடந்த நான்கு மாதங்களுக்கு முன்பாக காணி பதிவகத்தில் கல்முனை வடக்கு பிரதேச செயலகத்துக்குட்பட்ட காணி பதிவக உரிமை மறுக்கப்பட்டது. அதேவேளை இவ்வாறு அரச வலைத்தளத்தில் இருந்து கல்முனை வடக்கு பிரதேச செயலக 29கிராம சேவகப் பிரிவுகளும் முழுமையாக அகற்றப்பட்டுள்ளன.எந்த அடிப்படையில் இது நியாயம் ?

இவ்வாறு காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் கேள்வி எழுப்பியுள்ளார்.

மேலும் அவர் தெரிவிக்கையில் –

1993 ஆண்டு முதல் முழு அதிகாரத் தோடும் இயங்கி வந்த கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தை வர்த்தமானி அறிவித்தல் இல்லை என கூறி துண்டாக துண்டாக கூறுபோட்டு வருகின்றார்கள்.

கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலகத்திற்கு இதுவரையில் வர்த்தமானி அறிவித்தல் இல்லை. ஆனால் சுயாதீனமாக இயங்குகின்றது.

ஆனால் இன்று 29கிராம சேவகர் பிரிவையும் உள்ளடக்கி செயல்படும் கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் சுயாதீன தன்மையை இல்லாதொழிக்க மிகத் தீவிரமாக இனவாத அரசியல்வாதிகளும் இனவாத அமைப்புக்களும் செய்கின்றன. இதற்கு அரச அதிகாரிகளும் துணை செல்கின்றனரா?

உப பிரதேச செயலகமான தோப்பூர் பிரதேசசெயலகத்துக்கு இலக்கமிடப்பட்டு அது அமைச்சின் அரச வலைத்தளத்தில் காட்டப்படுகின்றது.

இந்தப் பாகுபாடு அரச கட்டமைப்பில் இனவாத அரசியல் தலைமீட்டின் உச்சம் என்றேசொல்லவேண்டும்.பாகுபாட்டுடன் தொடர்ந்து கல்முனைமக்கள்புறக்கணிக்கப்பட்டு நடத்தப்படுமானால் இன நல்லிணக்கம் என்ற சொல்லைத் தேடிச் செல்ல வேண்டி நிலை ஏற்படும். கல்முனை மக்களின் மனநிலை மிக கொதிப்படைந்துள்ளது. விரைவில் இதற்கான முடிவு ஒன்றினை பெற வேண்டியது காலத்தின் கட்டாயம் ஆகும். – என்றார்.

### வாலிப முன்னணி துணைச்செயலாளர்

கல்முனை வடக்கு பிரதேச செயலகம் தன் அதிகாரத்தை உபயோகிக்க முட்டுக்கட்டை இடும் நபர்கள் வடகிழக்கு இணைய இணைக்குவார்கள் என்பது தமிழ்த் தேசிய கட்சிகளின் பகல் கனவே ஆகும்.

– இவ்வாறு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வாலிப முன்னணி துணைச் செயலாளர் அ. நிதான்சன் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்..

வடகிழக்கு இணைப்பு எனும் நோக்கோடு சிறுபான்மை சமூகமாக ஒன்றிணைய வேண்டும் எனவும் அதன் ஊடாக தமிழ் பேசும் சமூகம் ஒற்றுமை என்று எல்லாம் தமிழ் தலைவர்கள் பேச தவில் அடிப்பது போன்று கிழக்கில் தமிழர் அடிக்கப்பட்டு கொண்டு இருக்கின்றார்.

1993 ஆண்டு முதல் முழு அதிகாரத்தோடும் இயங்கி வந்த கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தை வர்த்தமானி இல்லை என கூறி துண்டாக துண்டாக சிதைக்கின்றனர். மூன்று தசாப்தத்திற்கு மேல் இன்று பிரதேச செயலகம் எனும் நிர்வாக அலகின் அதிகாரம் முழுமையாக இன்னொரு பிரதேச செயலகத்தின் வரம்பு மீறிய செயலால் பாதிக்கப்பட்டு வருகின்றது. காரணம் கேட்டால் பிரதேச செயலகம் எனும் வர்த்தமானி இல்லை என கூறுகின்றனர்.

குறிப்பாக கோறளைப்பற்று மத்திக்கு இதுவரையில் பிரதேச செயலகத்துக்கு வர்த்தமானி இல்லை. ஆனால் சுயாதீனமாக இயங்குகின்றது. ஆனால் இன்று 29கிராம சேவகர் பிரிவையும் உள்ளடக்கி செயல்படும் பிரதேச செயல கத்தின் சுயாதீன தன்மையை இல்லாதொழிக்க மிகத் தீவிரமாக இனவாத அரசியல்வாதிகளும் இனவாத அமைப்புக்களும் செய்கின்றன.இதற்கு அரச அதிகாரிகளும் துணை செல்கின்றனரா?

நேற்று முன் தினம் அரச வலைத்தளத்தில் இருந்து கல்முனை வடக்கு பிரதேச செயலக 29கிராம சேவகப் பிரிவுகளும் முழுமையாக அகற்றப்பட்டுள்ளன. எந்த அடிப்படையில் இது நியாயம்? உப பிரதேச செயலகமான தோப்பூர் பிரதேச செயலகத்துக்கு இலக்கமிடப்பட்டு அவை அமைச்சின் அரச வலைத்தளத்தில் காட்டப்படுகின்றது. இது அரச கட்டமைப்பில் இனவாத அரசியல் தலைமீட்டின் உச்சம் என்றே சொல்ல வேண்டும்.

பாகுபாட்டுடன் தொடர்ந்து கல்முனை மக்கள் புறக்கணிக்கப்பட்டு நடத்தப்படுமானால் இன நல்லிணக்கம் என்ற சொல்லை தேடிச் செல்ல வேண்டி நிலை ஏற்படும். கல்முனை மக்களின் மன நிலை மிக கொதிப்படைந்துள்ளது. விரைவில் முடிவு ஒன்றினை பெற நாம் ஒற்றுமையாக வேண்டியது காலத்தின் கட்டாயம் ஆகும்.

மேலும் ,இவ்வாறு இம்சை தரு நடவடிக்கைகளுக்கு இறுதி முடிவு எட்டப்படும் காலம் விரைவில் என்பதனை இனவாத அரசியல்வாதிகள் ஞாபகம் வைத்து கொள்ள வேண்டும்.தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒற்றுமைக்காக மட்டுமே குரல் கொடுத்து வருகின்றது. ஆனால் இனவாதம் தலைதூக்க இனி ஒரு போதும் இடமளியோம். – என்றார்

# தம்பலகாமத்தில் இளைஞர்களுக்கு விழிப்புணர்வுப் பயிற்சிப் பட்டறை





(ஹஸ்பர்)

திருகோணமலை, தம்பலகாமம் பிரதேசத்துக்குட்பட்ட பகுதியில் போதைப்பொருள் தடுப்பு மற்றும் பெண்கள் வன்முறை தொடர்பான விழிப்புணர்வுப் பயிற்சிப் பட்டறை புதுக்குடியிருப்பு தெலுங்கு நகர் கிராம அபிவிருத்தி சங்கக் கட்டடத்தில் நேற்று நடைபெற்றது .

பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி அவர்களின் வழிகாட்டுதலுக்கிணங்க இடம்பெற்ற இந்த விழிப்புணர்வு நிகழ்வை இளைஞர் அகம் ஏற்பாடு செய்திருந்தது.

போதைப் பொருள் பாவனை, பெண்களுக்கு ஏற்படும் வீட்டு வன்முறைகள் எனப் பல விளக்கங்கள் இதன் போது இளைஞர், யுவதிகளுக்காக விழிப்புணர்வூட்டப்பட்டது.

வளவாளராகபெண்கள்அபிவிருத்திஉத்தியோகத்தர் கே.பாமினி மற்றும் அகம் நிறுவன உத்தியோகத்தர், சமுதாயம் சார் சீர்திருத்த உத்தியோகத்தர் ஹம்சபாலன் உள்ளிட்டோர் பங்குபற்றினர்.

இதில் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் அனஸ், சமுதாயசீர்திருத்த அபிவிருத்தி உத்தியோகத்தர் ஹம்சன் இளைஞர் சேவை உத்தியோகத்தர் ஜாபீர், சிறுவர் மற்றும் மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர், தம்பலகாமம் பொலிஸ் அதிகாரிஅகம் நிறுவன உத்தியோகத்தர்கள், இளைஞர், யுவதிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# நிந்தவூர் கடல் அரிப்பை தடுப்பது குறித்து ஜனாதிபதி செயலருடன் முஷாரப் பேச்சு!



ஜனாதிபதியின் செயலாளர்களை நேற்று (வியாழக்கிழமை) சந்தித்த நாடாளுமன்ற உறுப்பினர் முஷாரப், நிந்தவூர் கடல் அரிப்பு தொடர்பில் விளக்கியதுடன் இரண்டு முன்மொழிவுகளை முன்வைத்துள்ளார்.

கொழும்பு துறைமுகத்தை அண்டிய துறைமுக நகரத்தை உருவாக்கும்போது பாதிப்புக்கள ஏற்பட்டால் அதைத் தடுக்க டெட்ராபோட்கள் கற்கள் கடந்த காலத்தில் அங்கு கொண்டுவரப்பட்டன.

ஆனால் எதிர்பாத்த பாதிப்புக்கள் துறைமுக நகர பணியில் ஏற்படாததால் அங்கு கொண்டுவரப்பட்ட கற்களை நிந்தவூர் பாலமுனை மற்றும் ஒலுவில் பிரதேச கடற்பகுதிகளுக்கு கொண்டு சென்று கடல் அரிப்பை கட்டுப்படுத்த முடியும் என முஷாரப் இதன்போது ஆலோசனை வழங்கியுள்ளார்.

அத்துடன் அம்பாறை மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமைய, கடல் அரிப்பைத் தடுப்பதற்காக தீர்மானிக்கப்பட தொகையைக் கொண்டு மேற்படி கற் களை கப்பலூடாக பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு கொண்டு வரும் அதேவேளை இந்தப் பிரச்சினைக்கான நிரந்தரத் தீர்வையும் வழங்க முடியும் எனவும் முஷாரப் ஜனாதிபதியின் செய லாளர்களிடம் தெரிவித்தார்.

ஆலோசனைகளை ஏற்றுக் கொண்ட ஜனாதிபதியின் செயலாளர்கள், தீவிரமடைந்த கடல் அரிப்பை நிரந்தரமாகத் தடுப்பதற்கு துறைமுக நகரம் மற்றும் துறை முகத்தை அண்டியுள்ள பகுதிகளில் காணப்படும் டெட்ராபோட்கள் கற்களை பாதிக்கப்பட்ட பிரதேசங் களில் பயன்படுத்த தேவையான சாத்தியப்பாடு களை நடைமுறைப்படுத்த முயற்சி எடுக்குமாறு உரிய அதிகாரிகளுக்குப் பணிப்புரை வழங்கி யுள்ளனர்.

# உலக புகைப்படப் பிடிப்பாளர் தின நிகழ்வு கிளிநொச்சியில்!



உலக புகைப்படப் பிடிப்பாளர் தின நிகழ்வு கிளிநொச்சியில் புதன்கிழமை இடம்பெற்றது.

கிளிநொச்சி மாவட்ட படப்பிடிப்பாளர் கூட்டுறவு சங்கத்தின் ஏற்பாட்டிலேயே இந்த நிகழ்வு இடம்பெற்றது.

கூட்டுறவு சபை மண்டபத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வின்போது படப்பிடிப்பாளர் சங்கத்தால் கௌரவிப்பு நிகழ்வும் முன்னெடுக்கப்பட்டது.

நிகழ்வில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரான எஸ்.சிறிதரன், கரைச்சி பிரதேச சபை தவிசாளர், படப்பிடிப்பாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.



# பண்டாரவன்னியனின் 219 ஆவது நினைவு!

வன்னி இராஜ்சியத்தின் இறுதி மன்னன் பண்டாரவன்னியனின், 219 ஆவது நினைவு நாள் நிகழ்வு வவுனியாவில் நேற்று (வியாழக்கிழமை) அனுஷ்டிக்கப்பட்டது.

வவுனியா நகரசபை மற்றும் பண்டார வன்னியன் விழாக் குழுவின் ஏற்பாட்டில் வவுனியா நகரசபை தலைவர் இ.கௌதமன் தலைமையில் காலை 8.15 மணிக்கு இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது, வவுனியா மாவட்ட செயலக முன்றிலில் அமைந்துள்ள பண்டார வன்னியனின் நினைவுத்தூபிக்கு ஜனாதிபதி சட்டத்தரணியும் அவரது சிலை மாவட்ட செயலகத்தில் அமைவதற்கு காரணமாக இருந்தவருமான மு.சிற்றம்பலம் சார்பாக மலர்மாலை அணிவிக்கப்பட்டது.

அத்துடன், நகரசபை உறுப்பினர்கள், பொது அமைப்பினர், அரச அதிகாரிகள், சமூக செயற்பாட்டாளர்களால் சிலைக்கு மாலை அணிவித்து, மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

இதனையடுத்து மேற்படி சிலைக்கு முன்பாக ஒருங்கிணைந்து செல்லும் மன்னார் பிரதான வீதி மற்றும் ஏ – 9 வீதி ஒன்றிணையும் பகுதிக்கு நேற்று முதல் பண்டாரவன்னியன் சதுக்கம் என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது.

நிகழ்வின் இறுதியில் தமிழ்மணி அகளங்கனால் நினைவுரையும் நிகழ்தப்பட்டிருந்து. அதனை தொடர்ந்து வவுனியா நகரசபை மண்டபத்தில் ஏனைய அரங்க நிகழ்வுகள் இடம்பெற்றிருந்தன.

## ஆடை ஏற்றுமதி வருமானம் தொடர்ச்சியாக 2 ஆவது மாதமாக 50 கோடி டொலர் கடந்தது!

இலங்கையின் ஆடை ஏற்றுமதி வருமானம் தொடர்ச்சியாக இரண்டாவது மாதமாகவும் 50 கோடி அமெரிக்க டொலர்களைக் கடந்துள்ளது.

இலங்கை முதலீட்டுச் சபை இதனைத் தெரிவித்துள்ளது.

ஜூன் மாதத்தில் இலங்கையின் ஆடை ஏற்றுமதி வருமானம் 53 கோடியே 60 லட்சத்து 65 ஆயிரம் அமெரிக்க டொலர்களாகவும், ஜூலை மாதத்தில் அதே வருமானம் 52 கோடியே 2 லட்சத்து 13 ஆயிரம் டொலர்களாகவும் பதிவாகியுள்ளது.

இந்த வருடத்தின் முதல் 7 மாதங்களைக் கருத்தில் கொண்டால், நாட்டின் ஆடை ஏற்றுமதி வருமானம் 300 கோடியே 30 லட்சம் அமெரிக்க டொலர்களைக் கடந்துள்ளது.

2021ஆம் ஆண்டில் ஆடை ஏற்றுமதி மூலம் இலங்கை 500 கோடியே 40 லட்சம் அமெரிக்க டொலர்களை ஈட்டியுள்ளது.

# கல்முனை மாநகரசபை பிரிவிற்குள் தன்னியன் காட்டு யானை அட்டகாசம்







(பாறுக் ஷிஹான்)

கல்முனை மாநகரசபை பிரிவிற்குட்பட்ட நற்பிட்டிமுனை,பாண்டிருப்பு, மருதமுனை பகுதியில் மக்கள் குடியிருப்புகளுள் ஊடுருவிய காட்டு யானைகள் வீடுகளுக்குள் புகுந்து சுற்றுமதில் மற்றும் பயனுள்ள வாழை மரங்களை துவம்சம் செய்துள்ளன.

அண்மைக்காலமாக இப்பகுதிகளில் காட்டு யானைகள் அட்டகாசம் அதிகரித்துள்ளன. இங்குள்ள கரவாகுப்பற்று கல்முனைக் கண்டத்திலுற்குள் நுழையும் காட்டுயானைகள் கல்முனை மாநகர சபைக்குட்பட்ட கிராமங்களுக்குள் உட்புகுந்து தொடர்ந்தும் மக்களை அச்சுறுத்தி வருகின்றன. இப் பிரதேசத்தில் கடந்த ஒரு வாரகாலமாக என்றுமில்லாத வகையில் தனியன் காட்டு யானை ஒன்று அட்டகாசத்தில் ஈடுபட்டு வருகின்றது.

கடந்த திங்கட்கிழமை அதிகாலை 2 மணியளவில் நற்பிட்டிமுனை, சேனைக்குடியிருப்பில் மக்கள் குடியிருப்பு நிறைந்துள்ள பகுதிக்குள் நுழைந்த இந்தத் தனியன் காட்டுயானை அங்குள்ள வீட்டு மதில் மற்றும் வாழை,பலா உட்பட பயனுள்ள மரங்களையும் துவம்சம் செய்துள்ளது. இவ்வாறு இரவு நேரத்தில் திடீரென வீட்டிற்குள் நுழைகின்ற தனியன் காட்டுயானையினால்பிரதேச மக்கள் அச்சமடைந்துள்ளனர். ஊருக்குள் யானை நுழைந்ததை அறிந்து கொண்ட மக்கள் விழிப்படைந்தது, அதனை விரட்டுவதற்கான முயற்சியில் ஈடுபட்டனர். சமீப காலமாக காட்டு யானைகள் சேனைக்குடியிருப்பு, நற்பிட்டிமுனை ,பாண்டிருப்பு , மருதமுனை, கிராமத்திற்குள நுழைந்து அட்டகாசம் செய்து வருவதினால் இப்பகுதி மக்கள் இரவு வேளையில் நித்திரையின்றி விழித்திருக்கின்றனர். இதனால் பல்வேறு உடல், உள உபாதைகளுக்குள்ளாகியும் வருகின்றனர். எனவே காட்டு யானைகளை விரட்டுவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 26.08.2022இல் வெளியிடப்பெற்றது.